## 10.ஆம் வகுப்பு –தமிழ்–சிற்றகல் ஒளி–பணித்தாள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:

1)தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக மா பொ சி கருதுவது------

அ)திருக்குறள் ஆ)புறநானூறு இ)கம்பராமாயணம் ஈ)சிலப்பதிகாரம்

2)காந்தியடிகள் சத்தியாகிரகம் என்ற அறப்போர் முறையைத்தொடங்கிவைத்த இடம்-----

தொடங்கிய ஆண்டு---

அ)இந்தியா,1906 ஆ)தென் ஆப்பிரிக்கா,1906

இ)இந்தியா,1922 ஈ)தென்னாப்பிரிக்கா, 1922

3) ஆங்கிலேயர்களுக்கு எதிராக வ.உ.சி தொடங்கிய கப்பல் நிறுவனம்--------

அ)சுதேசி ஆ)தமிழக கப்பல் நிறுவனம் இ) வ.உ.சி ஈ) மாடன் இந்தியா

4)மா பொ சி யின் பெற்றோர்

அ) சின்னசாமி, இலக்குமி ஆ)கனகசபை,இலக்குமி

இ)பொன்னுசாமி,சிவகாமி ஈ)சாத்தப்பன், விசாலாட்சி

5) மா பொ சி அவர்களுக்கு பெற்றோர் இட்ட பெயர்

அ) முத்தையா ஆ) சுப்புரத்தினம் இ) சுப்ரமணியன் ஈ) ஞானப்பிரகாசம்

6) மா பொ சியை சிவஞானி என்று அழைத்தவர்----------

அ) சரபையர் ஆ) சோசியர் இ) ஞான முனிவர் ஈ) திருத்தாண்டகம்

7)மா பொ சி இளம்வயதில் எப்பாடல்களைப் பாடி இலக்கிய அறிவை வளர்த்துக்கொண்டார்?

அ)நாட்டுப்புறப் பாடல்கள் ஆ)அம்மானை இ)தூது ஈ)பரணி

8)மா பொ சி எவ்வாறு இலக்கிய அறிவு பெற்றார்?

அ) நூல்களைப் படிப்பதன் மூலம் ஆ) எழுதுவதன் மூலம்

இ) மனப்பாடம் செய்வதன் மூலம் ஈ) சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலம்

9)அறிவுவிளக்கம் பெறுவதற்கு இரண்டு வழிகளாக மாபொசி கூறுவன----,---

அ)கல்வி, கேள்வி ஆ) கல்வி, ஓவியம் இ) கலை, பண்பாடு ஈ) கலை, இசை

10)மா பொ சி யின் கேள்விஞானத்தைப் பெருக்கியதில் முக்கியபங்கு வகித்தவர்

அ)குன்றக்குடி அடிகளார் ஆ)திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள்

இ) சோமசுந்தர பாரதியார் இ) மதுரை முத்து

LIVEWORKSHEETS